Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 51

வெள்ளிக்கிழமை
16 ஜனவரி 2026

தை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மன்னாரில் காற்றாலை; ஜனாதிபதி அடிக்கல்!

மன்னார், ஜன. 16
மன்னாரில் 50 மெகாவாட் காற்றாலை அமைப்பதற்கான அடிக்கல்லை ஜனாதிபதி அநுர நேற்று நடுகை செய்தார்.
ஹேலிஸ் பென்டன்ஸ் மற்றும் ஹேலிஸ் குழுமத்தின் அங்கமான ஹேவிண்ட்

>>11

# போர்க்குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசுக்கு வலியுறுத்து

**கொழும்பு, ஜனவரி 16**

**போர்க்குற்றவாளிகளையும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோரையும் தண்டிக்கும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது. அந்தப் பொறுப்புக்கூறல் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும். அதுவரை, இலங்கை மீதான அழுத்தத்தை உலக நாடுகள் வலுவாக முன்வைக்க வேண்டும் - இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

>>11



## தமிழ் மக்களின் நம்பிக்கையை சிதைவடைய விடமாட்டேன்!

யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு

## காணி விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி இன்று அறிவிப்பு?

முப்படைத் தளபதிகளுடன் நேற்றிரவு தீவிர ஆலோசனை

விரிவுகள் பக்கம்:-11

திருகோணமலை புத்தர்சிலை

## சிறையிடப்பட்ட பிக்கு உணவுத் தவிர்ப்பில்!

விரிவு பக்கம்:-11

மன்னாரில்

## கடலில் மூழ்கி இருவர் பலி!

மன்னார், ஜன. 16
மன்னார், பேசாலை கடற்பரப்பில் நீராடச் சென்ற இளைஞர்

>>11

## பிரஜாசக்தி சட்டவிரோதம் எதிர்த்து தமிழரசு வழக்கு

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பிரஜாசக்தித் திட்டம் சட்டவிரோதமானது. ஜனநாயகக் கட்டமைப்புக்கு நிகராக, தனிப்பட்ட கட்சியை முன்னிலைப்படுத்தும் அந்தத் திட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் - இவ்வாறு

>>11



பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்

## நீண்டகாலம் சிறையிலுள்ளோரின் தண்டனையைத் தளர்த்த ஆராய்வு

கொழும்பு, ஜன. 16
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், நீண்டகாலம் சிறையிடப்பட்ட நபர்களின் தண்டனையைக் குறைப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.
இலங்கையில் நீண்டகாலமாக நடைமுறையில் உள்ள பயங்

>>11

முரச்சந்தி முராளி

"அவை போட்ட வழக்கு இப்ப அவைக்கே ஆப்பா மாறப்போகுது போல"

## நாவற்குழியில் டிப்பர் விபத்து; இரு இளைஞர்கள் துயரச்சாவு

மன்னார், ஜன. 16
மன்னார் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நாவற்குழி பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற டிப்பர் விபத்தில், அதில் பயணித்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

>>11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4317 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 04 15 36 68 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1384 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 32 38 51 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0343 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 0 3 7 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2423 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 11 44 53 59 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6075 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 8 3 2 9 0 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2105 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 35 38 54 64 |
| விசேட எழுத்து | X |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0191 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 32 62 |

# தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தை யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை




**வவுனியா, ஜன.16**

**சிங்கள இனவாதக் கதைகளால் மறைக்கப்படும் தமிழ் வரலாற்றை மீட்டெடுக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் சுதந்திரமான தொல்லியல் ஆய்வுத் திணைக்களம் ஒன்று நிறுவப்படவேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தைப்பொங்கல் தினமான நேற்று வவுனியா ஏ9 வீதியில் 3,251 நாள்களுக்கும் மேலாகத் தொடர்ந்துவரும் தமது சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தின்போது அவர்கள் இவ்வாறு ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அறிஞர்களின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுதந்திரமான தொல்லியல் திணைக்களம் உருவாக்கப்படவேண்டும். இது தமிழ் சைவம் மற்றும் தமிழ் பௌத்தத்தின் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணரவும், பண்டைய தமிழ் நாகரிகத்தை ஆவணப்படுத்தவும் வழிவகை செய்யும்.

தமிழர்கள் இந்த மண்ணில் குடியேறிகளோ அல்லது வெளியாள்களோ அல்ல. சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்பும், மகாவம்சம் எழுதப்படுவதற்கு முன்பும் இந்த நிலம் தமிழர்களுக்குச் சொந்தமானது. சிங்கள இனவாதக் கதைகள் தமிழர்களைத் தவறாகச் சித்திரித்து வருகின்றன. இந்தப் பொய்களை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம்.

தமிழ் மக்கள்மீது தொடரும் கட்டமைப்பு ரீதியான அழிவுகளைத் தடுத்துநிறுத்தவும், காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பான உண்மையை வெளிக்கொணரவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தலையிடவேண்டும். எமது மூதாதையர் தாயகத்தில் தமிழர்களின் இறைமையை மீட்டெடுக்க சர்வதேச நாடுகள் ஆதரவளிக்கவேண்டும்.

இந்தப் போராட்டம், வெறும் பிள்ளைகளுக்கான தேடல் மட்டுமல்ல, தமிழ் வரலாற்றையும் கண்ணியத்தையும் மீட்டெடுப்பதற்கான கூட்டு உறுதிப்பாடு - என்றனர். (ச-110)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0783 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 7 9 5 6 1 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3049 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 30 37 57 79 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 04 08 13 39 |
| வெற்றி வாரம் | 5210 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0879 |
| வெற்றி இலக்கம் | 05 06 31 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 25 46 48 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4761 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கம் | 10 12 29 33 |
| வெற்றி வாரம் | 2225 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 15.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 07 08 36 53 |
| வெற்றி வாரம் | 2875 |

# வவுனியாவில் 'ரேஸ்' ஓடும் இளைஞர்கள் அச்சத்தில் பொதுமக்கள்

வவுனியா, ஜன.16

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில், அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தும் இளைஞர்களின் பொறுப்பற்ற செயலால் நேற்றுமுன்தினம் கோர விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் பெண் ஒருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 16 மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்களும் காயமடைந்துள்ளனர். அத்துடன் அருகில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 60 வயதுடைய முதியவர் ஒருவரும் விபத்தில் சிக்கி காயமடைந்தார். விபத்துத் தொடர்பில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த வீதியை அத்தியாவசியத் தேவைகளுக்காக அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்றனர். ஆனால், சில இளைஞர்கள் பொதுமக்களின் உயிரைப் பறிக்கும் வகையில் 'ரேஸ்' ஓடுவது போல அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துகின்றனர். இதனால் அவ்வீதியால் பயணிக்கும்போது மக்கள் அச்சநிலையுடன் தமது பயணிக்க வேண்டியுள்ளது என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-110)

# தூதுவர்கள் நியமனத்துக்கு உயர்பதவிகள் குழு அனுமதி

கொழும்பு, ஜன.16

புதிய தூதுவர்கள் நியமனங்களுக்கு நாடாளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் அமைச்சின் செயலாளர் ஒருவரின் நியமனத்துக்கும் இந்தக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மலேசியாவுக்கான இலங்கையின் தூதுவராக தர்ஷன மகேந்திர பெரேராவின் நியமனத்துக்கும், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக தசநாயக்க முதியன்சலாகே சுமித் பிரியந்த தசநாயக்கவை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. ஒஸ்திரியா குடியரசுக்கான இலங்கைத் தூதுவரும், நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமாக தயானி மெண்டிஸ்ஸை நியமிப்பதற்கும், ருமேனியாவுக்கான இலங்கைத் தூதுவராக சமந்த பிரிய தர்ஷன வீரசிங்க பத்திரனவின் நியமனத்துக்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது. அதேநேரம், சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடவலவவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியது. (எ-இ)



# கட்சித் தேவைக்காக கல்வி மறுசீரமைப்பு

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.16

நாட்டில் கல்வி மறுசீரமைப்பென்பது சிறப்பான பண்புகளுடன் இடம்பெறவேண்டும் என்பதை ஏற்கின்றோம். எனினும், கட்சியொன்றின் தேவைக்காக உருவாக்கப்படும் கல்வி முறைமையை ஏற்க முடியாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படவேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கை. அந்தப் பணியை முன்னெடுக்கும் பிரதமர் பதவி விலகவேண்டும் என்பது இரண்டாவது விடயமாகும். எமது முதலாவது கோரிக்கையின் பிரகாரம் கல்வி மறுசீரமைப்பு நிறுத்தப்பட்டுள்ளது. நான் நாட்டுக்காகவே எனது கடமையை நிறைவேற்றினேன். இதன்மூலம் கிடைக்கப்பெற்ற வெற்றிக்கு எவர் உரிமை கொண்டாடினாலும் எனக்குப் பரவாயில்லை-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருத்துவர்கள் சிக்கலைத் தீர்க்க அரசுக்கு 10 நாள் கால அவகாசம்

**கொழும்பு, ஜன.16**

**நாட்டில் சுகாதாரக் கட்டமைப்பில் உருவாகியுள்ள நெருக்கடி மற்றும் மருத்துவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகான சுகாதார அமைச்சருக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 10 நாள் கால அவகாசம் வழங்கியுள்ளது.**

சுகாதார அமைச்சருடன் எட்டப்பட்ட இணக்கப்பாடு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய மருத்துவர்களுக்கான விசேட சேவைப் பிரிவு மற்றும் புதிய சம்பளக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஓராண்டுக்கும் மேலாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அரச மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவர்கள் உட்பட மனிதவளப் பற்றாக்குறை மற்றும் கொடுப்பனவு, சம்பளப் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. சுகாதார அமைச்சருடன் எட்டப்பட்ட எழுத்துபூர்வ உடன்படிக்கையும் அரசாங்கத்தால் மீறப்பட்டுள்ளது. தற்போது உருவாகியுள்ள சிக்கல்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்கவேண்டும். அவ்வாறு நடக்காவிட்டால் அன்று காலை 8 மணிமுதல் நாடளாவிய ரீதியில் மருத்துவர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள் - என்றார். (எ-இ)

## இதய சத்திரசிகிச்சை இளையோரிடையே உயர்வு

கொழும்பு,ஜன.16



இதய சத்திரசிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை சத்திரசிகிச்சை நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து விசேட சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் நாலக திசாநாயக்க தெரிவிக்கையில், முன்னதாக 60 முதல் 70 வயதுக்கு இடைப்பட்டவர்கள், இதய சத்திரசிகிச்சை பெற்றுவந்த நிலையில், தற்போது 25 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதை அவதானிக்கமுடிகின்றது. உலகளவில் நடுத்தர வயதுக்குட்பட்டோரில் ஏற்படும் இறப்புகளில் பெரும்பாலானவை மாரடைப்பால் ஏற்படுகின்றன. இதய நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உடற்பயிற்சி, உரிய உணவு முறை, மன அழுத்த முகாமைத்துவம் மற்றும் இரத்தக் கொழுப்பைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை மிக அவசியம்- என்றார். (ச)

## 10 நீர் சுத்திகரிப்பு அலகுகளை நன்கொடையாக வழங்கிய பிரேசில்

கொழும்பு, ஜன.16

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவாக பிரேசில் அரசாங்கம் 10 உயர் திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு அலகுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கையில் உள்ள பிரேசில் தூதரகத்தின் பதில் பொறுப்புத்தூதுவர் மோனிகா மரியா மீரேல்ஸ் நாசரால், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம் கடந்தவாரம் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு நாளைக்கு 10 ஆயிரம் லீற்றர் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட இந்த நீர் சுத்திகரிப்பு அலகுகள், தினமும் சுமார் 7 ஆயிரம் பேருக்கு சுத்தமானதும், பாதுகாப்பானதுமான குடிநீரைக் கூட்டாக வழங்கும். (எ-இ)

## மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை, ஜன.16

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்காமுனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கியதில் 13 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

சிறுவன் தனது வீட்டில் மின் ஆளியை அழுத்தியபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியுள்ளது. சிறுவன் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கல்விச் சீரமைப்புக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஜன.16

அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இலவசக் கல்வியைப் பாதுகாக்க வலியுறுத்தியும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தால் நேற்றுமுன்தினம் கொழும்பு -புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலவசக் கல்வியின் மரணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கறுப்பு நிறப் பெட்டியொன்றைச் சுமந்துவந்த போராட்டக்காரர்கள், புதிய பாடத்திட்டங்கள் மாணவர்களைக் கல்வியிலிருந்து அந்நியப்படுத்துகின்றன என்று கோஷமிட்டனர். 'சுதந்திரக் கல்விக்காக மாணவ மக்கள் இயக்கம்' ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தால் கோட்டைப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (எ-இ)

## பச்சைக் கலரு சிங்கிச்சா.... சிவப்புக் கலரு சிங்கிச்சா...!

யாழ்ப்பாணம் கச்சேரியிலையும், பிரதேச செயலகங்களிலையும் வேலை நடக்குதோ இல்லையோ, ஒரு பெரிய 'பஷன் ஷோவுக்கு' மட்டும் குறைவில்லையாம். அரசாங்கம் குடுக்கிற சம்பளத்துல சீவியத்தை ஓட்டிறதே பெரிய கஷ்டம் எண்டு சனம் கத்திக்கொண்டிருக்க, இஞ்ச இருக்கிறசில அதிகாரிமாரோ, பெண் உத்தியோகத்தர்களைச் சீலை கட்டச் சொல்லிப் படுத்துற பாடு கொஞ்ச நஞ்சமில்லை.

உண்மையைச் சொன்னால், 1989இல் பிரேமதாஸா காலத்துல இருந்தே இந்தப் பொம்பிளை உத்தியோகத்தர்மார் எப்பிடியான உடுப்புப் போடோனும் எண்டு தெளிவான சட்டங்கள் இருக்கு. 2019, 2022 இல வந்த சுற்றுநிருபங்கள் எல்லாம் என்ன சொல்லுது? "கண்ணியமான உடையில வாங்கோ, கர்ப்பிணிப் பெண்களைச் சீலை கட்டச் சொல்லி வற்புறுத்தாதேயுங்கோ " எண்டுதானே சொல்லுது? ஆனா எங்கடை யாழ்ப்பாணக் கச்சேரியிலையும் சில பிரதேச செயலகங்களையும் இருக்கிற சில மேலதிகாரிமார், தங்களைத் தாங்களே பெரிய கொம்பு முளைச்ச ஆக்கள் எண்டு நினைச்சுக்கொண்டு புதுப்புது ரூல்ஸ் போடுகினமாம்.

திங்கட்கிழமை எண்டால் காணும் , ஒப்பீஸுக்கு வாற சனத்துக்கு வேலை செய்யினமோ இல்லையோ ஆனால் எல்லாப் பொம்பிளை உத்தியோகத்தர்மாரும், ஒரே கலர் சீலையில நிக்கவேணும் எண்டு ஓர்டர் போடுகினமாம். இதுல கொடுமை என்னெண்டால், ஒரு பிரதேச செயலாளர் மாறினால் அவர் தனக்குப் பிடிச்ச இன்னொரு கலரை மாத்திப்போடுவாராம். இவையின்ர இந்தக் 'கலர்' விளையாட்டால உடுப்புக்கடைக்காரருக்குத்தான் தான் யோகம். அந்தக் கடையளில யாவாரம் கொடிகட்டிப் பறக்குதாம். ஆனா பாவம், இந்த உத்தியோகத்தப் பொம்பிளையள் தங்கட பிள்ளையின்ர படிப்புச் செலவு, உடுப்புச் செலவை விட்டிட்டு, இந்த அதிகாரிகள்ட ரசனைக்காக மாசம் மாசம் புதுப் புதுச் சீலையா வாங்கிக் கட்டவேண்டி இருக்கு.

முதலில பொம்பிளை உத்தியோகத்தர்மாருக்கு மட்டும் எண்டிருந்த உந்தக் கலர் உடுப்பு வருத்தம் இப்ப ஆம்பிளை உத்தியோகத்தர்மாருக்கும் தாவிட்டுதாம். "பொம்பிளையள் கட்டுற சீலைக் கலர்ல தான் நீங்களும் சேர்ட் போட வேணும்'' எண்டு கட்டாயப்படுத்துகினமாம். இப்ப அவையள் பொம்பிளையளின்ர சாறிக்கலரில சேர்ட் எடுக்க ஓடுப்பட்டுத் திரியினம். அதைவிட முந்தி ஒப்பீஸில எல்லாரும் ஒருநாள் மட்டும் தான் இப்பிடி யூனிபோர்ம் மாதிரி ஒரே கலர்ல உடுப்புப் போட்டவை, இப்ப என்னடாவெண்டால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலராம். சில ஒப்பீஸிகளில ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிக் கலர் சீலை, சேர்ட் எண்டு உந்தக் கலர் விளையாட்டு கூடிக்கொண்டே போகுதே தவிர குறைஞ்சபாடாயில்லை.

எங்கட பிரதமர் ஹரிணி ஒரு பெண்ணியவாதி, நவீன சிந்தனை உள்ளவர் எண்டு நம்பிச் சிலபேர் அவரிட்ட முறையிடலாம் எண்டு பாக்கினம். ஆனா பாவம், அவரே இப்ப 'புதுச்சிலபஸ்' விவகாரத்துல விழுந்த அடியில இருந்து எழும்பி வராமல் குறண்டிப்போய், ஒவ்வொரு விகாரையா ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறார். அவரிட்ட போய் முறையிட்டு தீர்வு கிடைச்சமாதிரித்தான். அரசாங்க வேலை எண்டால் அதுக்கு ஒரு கௌரவம் வேணும் தான், இல்லை எண்டு சொல்லேல்ல. ஆனா அதிகாரிகளின் தனிப்பட்ட ரசனைக்காகவும், உடுப்புக்கடைக்காறரின் லாபத்துக்காகவும் அப்பாவி உத்தியோகத்தர்களை இப்பிடிச் சிப்பிலியாட்டுறது நியாயமில்லை. வேலைப் பிரச்சினையளைத் தீர்க்க வக்கில்லை, ஆனா சீலைக் கலரை மாத்திறதில அதிகாரிமார் காட்டுற அக்கறையைப்பாக்கேக்க சிரிப்பாக் கிடக்கு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிப்பொங்கல்

## பசுவைப் பாதுகாப்போம் வாரீர்



மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தம்

**கோ** மாதா எங்கள் குலமாதா" பத்து மாதங்கள் எம்மை சுமந்து பெற்று தாயானவள் எமக்கு பாலூட்டி வளர்ப்பது போல எமது ஆயுட் ககாம் முழுதும் நிறையுணவாகிய பாலைத் தந்து எம்மை வளர்ப்பது பசு. பசுவை 'கோ' என்றும் 'தேனு' என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப்பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர்.

பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்க மாட்டாள் என்றும் பசு இல்லாத நாடு காட்டுக்குச் சமமாகும்.

***ஆவிலா மனையகம் அழகுன்றுமே***
***ஆவிலா மனையகம் அமலை நீக்குமா***
***ஆவிலா நாடெலாம் அடவியாகுமே***

இந்தச் செய்திகள் எல்லாம் ஈழத்துச் சிதம்பர புராண முடையார், நவாலியூர். சோ. இளமுகனார் அழகாகக் கூறியுள்ளனர்.

பசுவின் உடலெங்கும் தேவர்கள், முனிவர்கள், கோதாவாரி முதலிய தீர்த்தங்களும், தெய்வ மூர்த்தங்களும் உறைவதாக சிவதருமோத்திரம் கூறுகிறது.

**மாட்டுப் பொங்கல்**

எங்கள் வாழ்விலே பசுமைப் புரட்சிக்கான வழியில் உதவிய சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் தைப்பொங்கல் நிறைவேற்றி அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் கொண்டாடி வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும், மாட்டையும் போற்றுகிறோம்.

சைவ சமயத்தின் பிரதான நூல்களுள் ஒன்றான வேதத்தில் முதற்பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்யலாகாது என்றும் அது உருத்திரனின் அன்னையெனவும், வசுக்களின் பிள்ளையாகவும், ஆதித்தியனின் சகோதரியாகவும், அனைவருக்கும் அதிதியாகவும், பாவம் அறியாத பிராணி என்றும் அறியமுடிகிறது. சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தையும் போற்றுகின்றன.

**பசுவதை சைவநெறிக்கு சிறிதும் ஒவ்வாத செயல்**

பசுவினைக் கொன்று உண்ணும் வழக்கம் வெளிநாட்டு வாசிகளாலும் வேறு சிலராலும் இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும் அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும் குறிப்பிடப்படுகிறது. அதனை உண்ணல் பாவிகளின் பழக்கமாகுமென்றும் அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பேசப்படுகிறது.

பசுவதை நடப்பதால் தான் எமது மக்களுக்கு துன்பங்களும், துயரங்களும் இன்று நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. விபத்துகள் நாளாந்தம் பெருகிவிட்டன. புதிய புதிய நோய்கள், இயற்கை அழிவுகள், இனப்பூசல்கள் பெருகிக்கொண்டே வருகின்றன.

எமது தேசமெங்கும் பசுக்கள் இடங்களை காவல் செய்து புனிதமான சைவநெறிக்கு பெருமைகள் சேர்த்து இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

## தளபதி கிட்டு ஆவணக்காட்சியகம் நல்லூரில் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம், ஜன.16

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கக் கடலில் காவியமான தளபதி கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 33ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வின் சிறப்பம்சமாக நல்லூர் தியாக தீபம் திலீபன் ஆவணக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட 'கிட்டு ஒரு தனி மனித வரலாறு' எனும் தொனிப்பொருளுடன் தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்துவைக்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)

## புத்தக அரங்க விழா; இணுவிலில் நாளை

யாழ்ப்பாணம், ஜன.16

இணுவில் அறிவாலயத்துடன் மக்கள் கலை இலக்கியப் பேரவை இணைந்து நடத்தும் இளையோர் புத்தக அரங்கக் கொண்டாட்டம் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் நாளைமறுதினம் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரையும் சிறுவர் நூல் கண்காட்சி, மலிவு விற்பனை என்பன இடம்பெறும். நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இலக்கிய அறிமுகம், நடனம், 'திருஞானசம்பந்தர்' என்ற தலைப்பில் கதாப்பிரசங்கம், 'மணிப்பூனையார்' எனும் சிறுவர் நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. அனுமதி முற்றிலும் இலவசம் எனவும், நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (ச-41)

## பாற்குடப்பவனி

யாழ்ப்பாணம், ஜன.16

சங்கரத்தை குளத்தடி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகி இன்று வெள்ளிக்கிழமை வரை இடம்பெறுகின்றது.

ஒவ்வொருநாளும் 'சக்தி மகத்துவம்' எனும் விடயத்தில் தெய்வீகப் பேருரையினை ஆசிரியர் மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார்.

இன்று வெள்ளிக்கிழமை ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திர ஆலயத்திலிருந்து பாற்குடப்பவனியும் தொடர்ந்து 108 கலச சங்காபிஷேகமும்இடம்பெறும். பேருரையில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று இடம்பெறவுள்ளது. (ச-41)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளையும் வீண் அலைச்சலையும் தவிர்ப்பது மிக அவசியம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன்– மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**மீனம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளையும் குறித்த நேரத்துக்குள் முடித்துவிட்டு உற்சாகமாக இருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# யாருடைய தவறு?

இலங்கையின் கல்விப்புலத்தில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள், தரம் 6 ஆங்கிலப் பாடநூலில் எழுந்த சர்ச்சைகளால் 2027ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளன. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை இலகுபடுத்தி, மாணவர்களின் சுமையைக் குறைக்கும் நோக்கிலும், ஏட்டுச் சுரைக்காய்த்தனமான கல்விமுறையை செயற்பாட்டு முறையிலானதாக மாற்றும் வகையிலும் முன்மொழியப்பட்ட இந்தச் சீர்திருத்தங்கள், திட்டமிடலில் நிலவும் குறைபாடுகள் மற்றும் போதிய சமூக உரையாடல்கள் இன்மையால் தற்போது முட்டுக்கட்டையை எதிர்கொண்டுள்ளன. தரம் ஒன்றுக்குரிய சீர்திருத்தங்கள் திட்டமிட்டபடி இவ்வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளபோதிலும், இடைநிலைக்கல்வியில் ஆரம்பமான தரம் 6 இல் ஏற்பட்டுள்ள தேக்கநிலை, ஒட்டுமொத்தக்கல்விச்சங்கிலியிலும் ஒரு இடைவெளியைத் தோற்றுவிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டது போல, அரசியல் காரணங்களுக்காகவும் தனிப்பட்ட நலன்களுக்காகவும் கல்வி மறுசீரமைப்பு சீண்டப்படுவது துரதிர்ஷ்டவசமானதே. எனினும், இத்தகைய விமர்சனங்களுக்கு இடமளிக்காத வகையில் ஒரு வலுவான தேசியக் கல்விக்கொள்கையை உருவாக்கத் தவறியமை அதிகாரத்தரப்பின் பலவீனத்தையே காட்டுகின்றது.

கல்வி மறுசீரமைப்பு என்பது வெறும் பாடப்புத்தகங்களை மாற்றுவதோ அல்லது பரீட்சை முறைகளைச் சீரமைப்பதோ மட்டுமல்ல; அது ஒரு நாட்டின் அடுத்த தலைமுறையின் சிந்தனைப் போக்கை வடிவமைக்கும் தேசியப் பணியாகும். சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர் ஜீ.வீரசிங்க சுட்டிக்காட்டியதைப் போல, எந்தவொரு எந்தவொரு மாற்றத்தையும் முன்னெடுப்பதற்கு முன்னர் அதன் நோக்கம், கொள்கை மற்றும் எண்ணக் கருக்களை உள்ளடக்கிய ஆவணத்தை மக்கள் முன் வைப்பது அவசியமாகும். அத்தகையதொரு ஆவணம் சகல தரப்பினருடனும் -ஆசிரியர்கள், கல்விமான்கள், பெற்றோர், மாணவர்கள் என அனைவருடனும் - பகிரங்கமாக விவாதிக்கப்பட்டிருந்தால், இன்று தரம் 6 பாடநூலில் எழுந்துள்ளதைப் போன்ற சர்ச்சைகளை ஆரம்பத்திலேயே தவிர்த்திருக்கமுடியும். ஒரு தேசியக்கொள்கை என்பது ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாறும் ஒன்றாக இருக்காமல், தேசத்தின் தேவையறிந்து சகல தரப்பினரதும் இணக்கப்பாட்டுடனேயே கட்டியெழுப்பப்படவேண்டும்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் அவசரமான மாற்றங்கள் மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைக்கும் ஒரு ஆபத்தான விளையாட்டாகும். கல்வி மறுசீரமைப்பானது ஒரு வினைத்திறனான மற்றும் வெற்றிகரமான பெறுபேற்றைத் தரவேண்டுமாயின், அது தற்காலிக அரசியல் இலாபங்களைக் கடந்து, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய நீண்டகாலத்திட்டமிடலாக அமையவேண்டும். சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்துவது ஒருபுறமிருக்க, கல்விக் கொள்கைகளை வகுப்பதில் நிபுணத்துவம் கொண்டவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவது காலத்தின் தேவையாகும். தற்போது ஏற்பட்டுள்ள காலதாமதத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, அனைத்துத் தரப்பினரதும் கருத்துகளை உள்வாங்கி, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சீரிய தேசியக் கல்விக்கொள்கையை அரசாங்கம் வகுக்கவேண்டும். அப்போதுதான், எமது பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் பிரகாசமான பாதையில் பயணிக்கமுடியும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை**

**பொருள்:** பெய்யாமல் விடுத்து உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியதும், பெய்வதன் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்வுக்கு வளம் சேர்ப்பதும் மழையே ஆகும்.




## இந்த ஆண்டின் 13 நாள்களில் விபத்துகளால் 77 பேர் மரணம்




**கொழும்பு, ஜன.16**

**இந்த ஆண்டின் முதல் 13 நாள்களில் இடம்பெற்ற 77 விபத்துக்களில் 82 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வீதி பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார். இந்த விபத்துகளில் பெரும்பாலானவை மதுபோதையில் வாகனம் செலுத்தியதால் ஏற்பட்டவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் தினமும் மது போதையில் வாகனம் செலுத்துகின்ற 500பேர் கைதுசெய்யப்படுகின்றனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கண்டறிவதற்குபோதுமான அளவு சுவாசப் பரிசோதனைக் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவித்த பின்னர் வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண்பதற்கு நடமாடும் போதைப் பொருள் சோதனை அலகுகள் நிறுவப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பங்குச்சந்தை ஏறுமுகம்

கொழும்பு, ஜன.16

கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் நேற்று முன்தினம் வரலாற்றில் மீண்டும் உச்சத்தைப் பதிவு செய்தது.

அதன்படி அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 23,708.70 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 12 ஆம் திகதி அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 23,659.70 அதிகூடிய புள்ளிகளாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



## அரச வாகனங்களுக்கு எரிபொருள் டிஜிற்றல் அட்டை

கொழும்பு.ஜன.16

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்காக டிஜிற்றல் அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் உயர் வெளிப்படைத்தன்மையுடனும் வினைத்திறனுடனும் எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## கழிவு முகாமைக்கு கொரியா நிதியுதவி

கொழும்பு, ஜன.16

கழிவு முகாமைத்துவத் திட்டமொன்றுக்கு 16.6 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்க கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான உடன்படிக்கை அண்மையில் கையெழுத்திடப்பட்டது. இது 2028ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பிரதிநிதிகளுக்கு கிடுக்குப்பிடி

கொழும்பு,ஜன.16

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துத் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் கப்பலுடன் தொடர்புடைய உள்ளூர் கப்பல் நிறுவனத்தின் 7 பிரதிநிதிகளுக்கு வெளிநாடு செல்லத் தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கப்பலில் ஆபத்து இல்லை எனத் தவறான தகவலைக் கூறி, துறைமுக அதிகாரியை ஏமாற்றி கப்பல் இலங்கைக்குள் நுழைய அனுமதி பெறப்பட்டுள்ளது என்று அவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**
சனிக்கிழமை - தை 03
17.01.2026
சுபநேரம் : 3.35 - 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல காணியை விடுவிக்கவேண்டும்

## தவிசாளர் நிரோஷ் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,ஜன.16**

**கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லக் காணியில் இராணுவம் முகாமிட்டிருப்பது உரிமை மீறலாகும். உறவுகள் அஞ்சலிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், காணியை விடுவிக்க அபிவிருத்திக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வலியுறுத்தியுள்ளார். கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாவீரர் துயிலும் இல்லக் காணி இராணுவத்தினருக்குக் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை நாம் புதிதாகக் கேள்விப்படுகின்றோம்.

இதனைக் கடுமையாக எதிர்க்கின்றோம். துயிலும் இல்லத்தில் எமது உறவுகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. மரணித்தவர்களை நினைவு கொள்ளும் உரிமை, அஞ்சலிக்கும் உரிமை எமது உறவுகளுக்குக் கிட்டவேண்டும் - என்றார். அதற்குப் பதிலளித்த அபிவிருத்திக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன்,

2014ஆம் ஆண்டு இராணுவத்துக்குக் காணி வழங்கப்பட்டுள்ளது. மாவீரர் துயிலும் இல்ல நிலங்களை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

படையினர் வசமுள்ள பெருமளவான காணிகள் விடுவிக்கப்படும். தையிட்டி விகாரைகூட அவ்வாறுதான்-என்றார். (க)




தைத்திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடாநாட்டு ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

மக்கள் காலையில் சூரியனுக்குப் பொங்கலிட்டு வழிபட்டதைத் தொடர்ந்து ஆலயங்களில் இடம்பெற்ற வழிபாடுகளில் பங்கேற்றனர். (க-17)

# வீதிகளில் கால்நடைகள் இனித் தண்டம் அறவீடு

## மன்னார் பிரதேசசபை அறிவுறுத்து



மன்னார் ,ஜன.16

மன்னார் பிரதேசசபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் நடமாடும் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு இனித் தண்டம் விதிக்கப்படும் என்று மன்னார் பிரதேசசபை அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பிரதான வீதிகளில் இரவு பகல் பாராது கட்டாக்காலி கால்நடைகள் வீதிகளுக்குக் குறுக்காகத் திரிவதாலும், படுத்து உறங்குவதாலும் விபத்துகள் ஏற்படுகின்றன. எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றிப் பிரதேசசபையினால் கைப்பற்றப்படும்.

கைப்பற்றப்படும் மாடு ஒன்றுக்கு நாளொன்றுக்கு 2,000 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 1,000 ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும். கால்நடைகளை மீட்டுச் செல்லத் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், தண்டப்பணமாக 500 ரூபாவும், பராமரிப்புச் செலவாக 500 ரூபாவும் மேலதிகமாக வசூலிக்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் மீட்கப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உரிமையாளர்கள் தங்களது கால்நடைகளைப் பாதுகாப்பான முறையில் அடைத்துவைத்துப் பராமரிக்குமாறு மன்னார் பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது. (க-60)



# முச்சக்கரவண்டிகளுக்கு போதை ஒழிப்பு ஸ்ரிக்கர்

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி களில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டும் ஆரம்ப நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபாலவால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திர மூர்த்தி றஜீவன், கருணநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி சிறிவர்த்தன, யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். 'முழுநாடும் ஒன்றாக தேசிய செயற்பாடு' விற்கின்ற, அடிமையான அனைவருக்குமான அறிவித்தல் அகன்று செல்' எனும் தொனிப்பொருளும், முறைப்பாட்டுத் தொலைபேசி இலக்கம் 1818 இனையும் உள்ளடக்கிய வகையில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. (க-66-9)

### தேசிய மட்ட

# டென்னிஸ் போட்டியில் சென்.பற்றிக்ஸ் சாதனை

யாழ்ப்பாணம்,ஜன.16

அகில இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான டென்னிஸ் போட்டியில், சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இரு அணிகள் சிறப்பு வெற்றியைப் பெற்றுள்ளன.

சிவப்பு நிறப் பந்துப் பிரிவில் தரம் 2 மாணவர்கள் சம்பியன் கிண்ணத்தையும், செம்மஞ்சள் நிறப்பந்துப் பிரிவில் தரம் 4 மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் பச்சை நிறப் பந்துப் பிரிவில் தரம் 5 மாணவர்கள் காலிறுதிச் சுற்றுக்கும் தெரிவாகி கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (க)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் வளங்களைச் சுரண்டி வாழ்வியலைக் கெடுப்பது நியாயமா?

## மன்னார் பொது அமைப்புகள் ஜனாதிபதியிடம் கேள்வி

**மன்னார் , ஜன.16**

**மன்னாரில் காற்றாலைத் திட்டத்தை திறக்கவரும் முன் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களையாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாய்க்க விடுவிக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார்த் தீவுப் பகுதிக்குள் காற்றாலைத் திட்டம் மற்றும் கனிம மணல் அகழ்வுத் திட்டங்கள் வேண்டாம் என்பது இப்பகுதி மக்களின் கூட்டுக்கோரிக்கையாகும். இதனை அடியோடு நிராகரித்து விட்டு, ஆட்சியாளர்கள் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது ஆழ்ந்த கவலையளிக்கிறது.

கடந்த 2025ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்படப் போவதில்லை எனவும், கனிம மணல் அகழ்வு முற்றாக நிறுத்தப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் தற்போது 14 காற்றாலைகளுக்கான பணிகள் நடைபெற்று வருவதோடு, கனிம மணல் அகழ்வு நிறுவனங்களும் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்து வருகின்றன. மன்னார் மாவட்டத்தில் சுமார் 2,21,220 ஹெக்டேயர் நிலப்பரப்பு வனத் திணைக்களம் மற்றும் வனவிலங்குத் திணைக்களத்தால் வர்த்தமானி மூலம் உள்வாங்கப்பட்டுள்ளது. இதில் 35,750 ஏக்கர் வளம் மிக்க பயிர்ச் செய்கை நிலங்களாகும். மேலும் 108 குளங்கள் இந்த நிலப்பரப்புக்குள் உள்ளடங்குகின்றன. ஆறு மாத காலத்திற்குள் இந்த நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்த போதிலும், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. உரித்து நிர்ணயம் செய்யப்பட்ட காணிகளைக்கூட மக்கள் பயன்படுத்தமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. படைகளுக்கும், பௌத்த விகாரைகளுக்கும் நிலங்கள் தாராளமாக ஒதுக்கப்படும் நிலையில், பூர்வீகக்குடிமக்களுக்கு ஒரு துண்டு நிலம் கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, காற்றாலைத் திட்டத்தைத் திறந்துவைக்க மன்னார் வருவதற்கு முன்னதாக, கையகப்படுத்தப்பட்டுள்ள எமது மக்களின் நிலங்களை விடுவிக்கவேண்டும்- என்றார். (ச-56)



## புதிய பயங்கரவாதச்சட்டம் கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி , ஜன.16

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான கருத்தமர்வு கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கருத்தமர்வில் உள்ளூராட்சி மன்றங்களின் மீனவ சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் குழுக்களின் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். இதில் வளவாளராக மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் பங்கேற்று விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதிநிதிகளிடையே கூட்டுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. மேலும், எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (ச-113)

## மாணவர்களின் எதிர்காலத்துக்காக எதையும் செய்வதற்குத் தயங்கோம்

### எதிர்க்கட்சித் தலைவர் உறுதி

கொழும்பு.ஜன.16

மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தயங்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிரணி கைவிடுமா? என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி மறுசீரமைப்பை ஒரு வருடத்துக்குப் பிற்போடுவதால் இந்த ஆட்சியின் கீழ் கல்வித்துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் தீரப்போவதில்லை. பல்வேறு தரப்பினர்களுடனும் கலந்துரையாடியே கல்வி மறுசீரமைப்பு இடம்பெற வேண்டும். இது கூட்டுமுயற்சியாக இருக்கவேண்டும். ஆனால் தற்போதைய ஆட்சியின்கீழ் கட்சியொன்றின் நிகழ்ச்சிநிரல் அமுலாகின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை உட்பட அனைத்து விடயங்களையும் நாம் உரிய வகையில் கையாள்வோம். 41 இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்துக்காக நாம் செய்யவேண்டிய அனைத்துத் திட்டங்களையும் முன்னெடுப்போம். அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கே நாம் எதிர்பார்க்கின்றோம். இது கொள்கை அடிப்படையிலான ஒன்றிணைவாகும். உரிய நேரத்தில், உரிய அறிவிப்பு வெளியிடப்படும் - என்றார். (க-44)



பருத்தித்துறை புனிதநகர் கற்கோவளத்தில் இயங்கிவரும் புரட்சி முன்பள்ளியின் 2026 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் மற்றும் கலாசார கலை, விளையாட்டு விழா நிகழ்வுகளை நடத்துவதற்கு ஜனநாயகப் போராளிகள் கட்சியால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அனைத்துலக தமிழர் பேரவைத் தலைவர் விநாயகமூர்த்தி நிமாலால் வழங்கப்பட்ட நிதியை ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன், முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளித்தார். (க-100)

## களவாக மணல் ஏற்றிய இரு டிப்பர்கள் பறிமுதல்

சாவகச்சேரி,ஜன.16

அனுமதிப்பத்திரமில்லாது மணல் ஏற்றிவந்த இரண்டு டிப்பர்கள் சாவகச்சேரி போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி மயூரன் தலைமையிலான குழுவினரால், பூநகரிப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை கைப்பற்றப்பட்டன. டிப்பர்களைச் சோதனையிட்டபோது, அனுமதிப்பத்திரம் இல்லாமை தெரியவந்தது.

அதனையடுத்து இரண்டு டிப்பர்களும் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றின் சாரதிகளும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-131)



## வவுனியா அமைப்புகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,ஜன.15

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட விளையாட்டு, கலாசார நிறுவனங்கள் மற்றும் கலைச் சங்கங்களுக்கு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கும் நிகழ்வு, நகராட்சி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சார அமைச்சின் நிதிப்பங்களிப்பில், விளையாட்டு மற்றும் கலைத்திறமைகளை வளர்க்கும் நோக்குடன் இவை வழங்கப்பட்டன. (க-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தள விமானநிலையத்தால் 10 ஆண்டுகளில் 39 பில்லியன் இழப்பு!


## சரிவை மீட்க அரசாங்கம் புதிய திட்டம்

மத்தள ராஜபக்ச சர்வதேச விமானநிலையம் கடந்த ஆறு ஆண்டுகளில் மட்டும் 39.3 பில்லியன் ரூபா நிகர இழப்பைச் சந்தித்துள்ளதாக அண்மைய கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ள நிலையில் நிதிச்சுமையை எதிர்கொள்ள இலங்கை அரசு தற்போது புதிய வியூகத்தை வகுத்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 3.36 பில்லியன் ரூபா செயற்பாட்டு இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வருமானமாக வெறும் 242.2 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்துள்ள நிலையில், அதன் பராமரிப்புச்செலவு 3.6 பில்லியனாக உயர்ந்துள்ளது. இந்த விமானநிலையத்தை நிர்மாணிக்க 36.5 பில்லியனுக்கும் அதிகமான தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில் தொடர்ச்சியான நிதிச்சுமையை எதிர்கொள்ள இலங்கை அரசு தற்போது புதிய வியூகத்தை வகுத்துள்ளது. புதிய முறைமையின்கீழ், விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். அத்துடன் சரக்கு சேவை, விமானப் பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் போன்ற வர்த்தக ரீதியான பகுதிகள் தனியார் முதலீட்டாளர்களுக்குத் திறந்துவிடப்படவுள்ளன. இந்த மாற்றத்தின்மூலம் விமானநிலையத்தின் இழப்பைக் குறைத்து, அதனை இலாபகரமாக மாற்றமுடியும் என அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. (ச-இ)

---

## 8ஆம் ஆண்டு நினைவு தினம்

### அமரர் பசுபதி பாலரஞ்சன்



தோற்றம் 14.12.1965 — மறைவு 15.01.2018

திதி:திரயோதசி (16.01.2026)

ரஞ்சனமான ரத்தினமே! பந்தம் விட்டு எங்கு சென்றீரோ? ரம்மியமான பேச்சால் பிரம்மிக்க வைப்பவரே - உம் ரம்மியமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம்.

எட்டாண்டு ஆனதையா? நேரில் உமைக்கண்டு ஒரு வார்த்தை பேச, ஒரு பார்வை காண உள்ளம் இன்னும் ஏங்குதையா

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்.

(CS 31009) A

---

## அம்மாவின் விண்ணக வாழ்வில் 22 ஆம் ஆண்டு



இறப்பு
16.01.2004

### திருமதி லில்லி தேவசகாயம்

அம்மான்றது வார்த்தை அல்ல...
அது வாழ்க்கை
என்றும் மறக்க முடியாத
பிள்ளைகள் நாங்கள்
இறக்கும் வரை நம்பிக்கையோடு
இரு அவ்வாறாயின் வாழ்
முடியாச்சு சூட்டுவேன் என்றார் ஆண்டவர்
அல்லேலூயா. அல்லேலூயா.

28, றக்கா லேன்,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/60455) J-1

---

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## சிவில் நடபடிக் கோவையின் 16ம் பிரிவின் கீழான அறிவித்தல்

01. ஆழ்வாப்பிள்ளை அரியநாயகம்
02. பெண் இந்திராதேவி
இருவரும்
புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய்.
- வழக்காளிகள்

வழக்கு இலக்கம் : காணி/1457/2025

எதிர்

1. **பொன்னுத்துரை பிரதீப்**
நவாலி வடக்கு. மானிப்பாய்
தலைவர் நண்பர்கள் விளையாட்டுக்கழகம். புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய்.
2. **சுபாகரன் சாருஜன்**
நவாலி வடக்கு. மானிப்பாய்
செயலாளர் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.
புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய்.
3. **பொன்னன் பொன்னுத்துரை**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
4. **சின்னையா விஜயரவிக்குமார்**
குடியேற்றத்திட்டம் கட்டுடை. மானிப்பாய்.
5. **சிவபாலன் ஜேந்துஜன்**
நவாலி தெற்கு. மானிப்பாய்.
6. **முத்துத்தம்பி பிரபாகரன்**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
7. **முத்துத்தம்பி சுபாகரன்**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
8. **ஆனந்தராஜா ஜெக்சன்**
குடியேற்றத்திட்டம் கட்டுடை. மானிப்பாய்.
9. **சின்னத்துரை சந்திரகுமார்**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
10. **இராமு கந்தசாமி**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
11. **கந்தையா ரவிச்சந்திரன்**
03ம் வட்டாரம். வேலணை
12. **தனராஜ்**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
13. **விஸ்வராசா உதயகுமார்**
நவாலி வடக்கு. மானிப்பாய்.
14. **நடேசு சரண்ராஜ்**
புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய்.
15. **பிரகாகரன் நிரோஜன்**
நவாலி வடக்கு. மானிப்பாய்
அனைவரும் உறுப்பினர்கள் நண்பர்கள் விளையாட்டுக்கழகம். புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய்.

- எதிராளிகள்

மேற்படி வழக்காளிகளால், கூட்டிணைக்கப்படாத அமைப்பாகிய "நண்பர்கள் விளையாட்டுக் கழகம்" புலவர் வீதி. நவாலி வடக்கு. மானிப்பாய் எனும் இடத்தில் இவ்வழக்குடன் தொடர்புடைய ஆதனத்தின் ஒரு பகுதியில் இருந்து மேலே பெயர் குறித்த எதிராளிகளை வெளியேற்றக் கோரி காணி/1457/2025 எனும் வழக்கினை இம்மன்றில் தாக்கல் செய்திருக்கின்றார்கள். மேற்படி விடயம் தொடர்பில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

இவ்வழக்கு எதிர்வரும் 2026 ம் ஆண்டு 04ம் மாதம் 30ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் அழைக்கப்பட இருப்பதினால் இவ்வழக்குடன் தொடர்புடைய யாரும் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணியூடாகவோ இம்மன்றில் தோன்றுமாறு அறியத் தருகின்றேன்.

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

(CS 60456)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 16.12.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

### அமரர் நற்குணசிங்கம் ஜெயலட்சுமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.01.2026) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (17.01.2026) சனிக்கிழமை மு.ப 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த கவலையின்போது நேரில் பங்குபற்றித் தேற்றியவர்களுக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மாலைகள் அணிவித்து மலர் வளையம், Banner வைத்தோருக்கும், தொலைபேசி மூலம் எமது கவலையில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மேலும் நிலாவரை 15 வீட்டுத்திட்ட குழுமத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] வீதி, 15- வீட்டுத்திட்டம்,
நிலாவரை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
076 715 5441

(CS/60462) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்பியக் கலைக்காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 16
மாணிக்க மங்கயற்கரசி பண்பாட்டுமைய அறக்கட்டளையின் ஏற்பாட்டில் 'எதிரொலிப்பு' எனப்படும் சமகாலக் காண்பியக் கலைக் காட்சி நாளை ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக 21 தமிழ்க் கலைஞர்கள் தங்களின் படைப்புகளை வழங்கியுள்ளனர். இந்தக் கலைஞர்கள் பலர் சர்வதேச அளவிலும், கொழும்பிலும் தமது படைப்புகளை காட்சிப்படுத்தியிருப்பினும் குழுவாக தமது படைப்புகளை யாழ்ப்பாணத்தில் காட்சிப் படத்துவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 01 . 1951



இறப்பு
15 . 01 . 2026

### யக்கோமுத்து எட்வேட் இராஜநாயகம்

சில்லாலை பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யக்கோமுத்து எட்வேட் இராஜநாயகம் அவர்கள் நேற்று (15.01.2026) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதித் திருப்பலி மற்றும் நல்லடக்கம் தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 31016)A

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 . 04 . 1940



மறைவு
26 . 01 . 2025

### அமரர் சுங்கிலி சின்னவி (சின்னவன்/ பொன்னு)

ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உங்கள் உயிர் மூச்சு என்றும் மறையாது
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு ஒழியாது

எங்கள் அன்புத் தெய்வமே குடும்பத்தின் ஒளி விளக்கே
எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர் அவசரமாய்
ஆலமரம்போல விழுதுகளைப் பரப்பி
எங்கள் தலைமுறையைத் தலைநிமிர வைத்தீர்கள்

வையகம் போற்ற வாழ்ந்து வானுறையும் தெய்வமாய்
இயற்கையில் இணைந்து பழுதில்லாப் புதுமலராய்
என்றும் எம் இதயங்களில் மணம் வீசும் அன்பு நிறைந்த அப்பாவே
நல்வழி காட்டிய உங்கள் கருணையினை
பேறாகப் பெற்றோம் பெருமை கொண்டோம்

நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
அணையாது ஒருபோதும் நாம் கொண்ட பாசம்
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம்
இயற்கையின் அசைவுகளில் - உங்கள்
உணர்வுகளை நுகர்ந்து - உங்கள்
பாதமலர் தூவி வணங்குகின்றோம்.

செல்வநகர்,
நாவற்குழி வடக்கு, கைதடி.
(CS/57596) J-1

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 316 4431

## மரண அறிவித்தல்



தோற்றம்
24.05.1935

மறைவு
15.01.2026

### இராசையா சிவபாக்கியம்

மஞ்சத்தடி தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவபாக்கியம் நேற்று (15.01.2026) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நாகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமேனை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, ஆறுமுகம், இலட்சுமிப்பிள்ளை மற்றும் இராசலட்சுமி, நாகையா, காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சரோஜினிதேவி மற்றும் விஜயகுமார், ஜெகதாம்பாள் மற்றும் காலஞ்சென்ற குமாரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கருணாகரன், கலாநிதி (கலா), கலாரஞ்சினி (சுமதி), கலாராணி (கீதா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் பாஸ்கரன், புஸ்பராசா, மனோரகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன் - ஜலசா, கார்த்திகா - லதீசன், கஜனி - நிஷாந்தன், கஸ்தூரி - கஜானன், கார்த்தீபன், கம்சா - யதுஷன், அஜன், சாருஜன் - ரிஷிக்கா, யபர்னா - செந்தூர், மதுஷன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சிவகாமி, யெசனியா, யஷ்வினி, அஸ்வினி, அஸ்வின், மீனா, சௌந்தரீகன், சதுர்த்திகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2026) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராச சௌந்தர்யம்
இல.22/4,
மஞ்சத்தடி தெற்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்
(CS 31014) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பெண்கள் ஆணைக்குழுவை இயங்க வைக்கவேண்டும் அரசாங்கம்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.16
தேசிய பெண்கள் ஆணைக்குழு நிதி, அலுவலகம், பணியாளர்கள் மற்றும் ஏனைய வளங்கல் இன்றிச் செயலிழந்துள்ளது. ஆணைக்குழு மகளிர் விவகார அமைச்சிலிருந்துமுழுமையான அரசியல்மற்றும்நிதிசுயாதீனத்துவத்துடன் செயற்படுவதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்று சிவில் அமைப்புக்கள், சிவில் மற்றும் பெண்கள் செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

10 சிவில் சமூக அமைப்புகளும், சிவில் மற்றும் பெண்கள் செயற்பாட்டாளர்கள் 138 பேரும் இணைந்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது- பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளதை அவதானிக்கின்றோம். வீட்டிலும், பணியிடங்களிலும், பொது இடங்களிலும், இணைய வழியிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. அரசாங்கத்தின் பிரதமருக்கு கூட இணையத்தில் பாலின அடிப்படையிலான அவமதிப்புகளும், தாக்குதல்களும் நிகழ்ந்துள்ளன. அண்மையில் சுவஸ்திகா அருலிங்கம் உள்ளிட்ட பெண் செயற்பாட்டாளர்கள் பலர் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவால் இணையத்தில் பாலியல் ரீதியான வார்த்தைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்காக அண்மையில் நீங்கள் நியமித்த தேசிய மகளிர் ஆணைக்குழுவை அணுக முயற்சித்தோம். ஆனால் அந்த ஆணைக்குழுவைத் தொடர்புகொள்வதற்கு எமக்கு எந்தவொரு வழியும் தென்படவில்லை. இதுபற்றி ஆராய்ந்தபோது அந்த ஆணைக்குழு பெயரளவில் மட்டுமே இருப்பதாகவும், நடைமுறையில் அது இயங்கவில்லை எனவும் நம்பகமாக தகவல்கள் கிடைத்தன.

தேசிய மகளிர் ஆணைக்குழுவுக்கு போதுமான நிதி வளங்கள் மற்றும் பிரத்யேக அலுவலக வசதிகளை வழங்கி, அதனை உடனடியாக இயங்கச் செய்யவேண்டும். அத்தோடு அந்த ஆணைக்குழு மகளிர் விவகார அமைச்சிலிருந்து முழுமையான அரசியல் மற்றும்நிதிசுயாதீனத்துவத்துடன் செயற்படுவதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கான தெளிவான காலகட்டத்தையும் நீங்கள் அறிவிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோம் - என்றுள்ளது. (எ-இ)




வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்று தைப்பொங்கல் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது. சிறப்பு அபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து பொங்கல் வழிபாடுகளுடன் பூசையும் நடைபெற்றது. (க-66)

# வீட்டுத்திட்டக் காசோலை ஜனாதிபதியால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குக் காசோலை வழங்கும் நிகழ்வில் இன்று கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார இரண்டு நாள்கள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்தார். வேலணை மற்றும் மானிப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற பொங்கல் விழாக்களில் அவர் கலந்து கொண்டார். இதன் தொடர்ச்சியாகவே, மீசாலை ஆரம்பப் பாடசாலையில் இன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள வீட்டுத்திட்டக் காசோலைகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் போதைக்கு எதிரான விசேட நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார். (ம-26)



# தமிழரசுக் கட்சியின் தைப்பொங்கல் வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன.16
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் வழிபாடு நேற்று வியாழக்கிழமை வடமாராட்சி மடத்தடி அலுவலக மண்டபத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-66.100)

# நாவல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.16
இராஜினிதேவி சிவலிங்கத்தின் 'மழைக் கால மேகம்' நாவல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும். ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி பிறேமினி பொன்னம்பலம் கலந்து கொள்வார். (க)


## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 11 . 1948



மறைவு
14 . 01 . 2026

### சாந்தாதேவி குலசிங்கம் (குஞ்சு)

அளவெட்டி வடக்கு, இலகடியினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தாதேவி குலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (14.01.2026)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - புதுநாயகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கிரிதர், சர்மிதா (UK) அவர்களின் அன்புத்தாயாரும், பிரியந்தனின் மாமியாரும், வைஷ்ணவி, ஐஸ்வர்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சரோஜினிதேவி, சிவலோகநாதன், வசந்தாதேவி மற்றும் சந்திராதேவி, சூரியகுமாரி, நிர்மலாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெட்சணாமூர்த்தி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் சோமபாலன், சிவனேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (16.01.2026) வெள்ளிக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
075 083 2022

(CG/60461) J-1



## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 11 . 1935



மறைவு
14 . 01 . 2026

### கிருட்டினர் சிவமணி

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்)

காரைநகரை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருட்டினர் சிவமணி (ஓய்வுபெற்ற அதிபர் - யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்) அவர்கள் கடந்த (14.01.2026) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவதேவி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சிவபாக்கியம், மகேந்திரம், நேசநாயகி மற்றும் திலகவதி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் சுகன்யா ஆகியோரின் மைத்துனரும், சிவகலா (பின்லாந்து), ஜெயக்குமார், விஜயகுமார், சசிகலா, சித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சன், கேதீஸ்வரன், விஜிகாந்தன், தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்ஜீவன், சஜீவன், கம்சா, அஷ்சயன், அபிமாதவன், சரண், டிரக்ஷா, தக்சன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2026) வெள்ளிக்கிழமை கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

40/18 நடராசர் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 577 4161, 077 725 0914


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மன்னாரில் தமிழீழம்!

மன்னார், ஜன. 16
மன்னாரில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் நேற்றுப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டுள்ளது. அதை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட கோலத்தில், 'தமிழீழம்' என்று எழுதப்பட்டிருந்தது. (அ-ம)

## மன்னாரில்...

வன் லிமிட்டெட் நிறுவனம், இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கு அண்மைக் காலமாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்தத் திட்டத்துக்கே ஜனாதிபதி அநுர நேற்று அடிக்கல் நட்டார்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வலுசக்தி பிரதி அமைச்சர் முஹறமது இலியாஸ் முஹமது அஹ்ரம், கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும், மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், முப்படை அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-213)

## தமிழ்...

தமிழ் மக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை சிறு துளியேனும் சிதைவடைய விடமாட்டேன். அந்த நம்பிக்கையைப் பத்திரப்படுத்தி, இனவாதம் இல்லாத நாட்டை நிச்சயம் கட்டியெழுப்புவேன் - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

வேலணையில் நேற்று இடம்பெற்ற பொங்கல் பண்டிகையில் ஜனாதிபதி அநுரவும் கலந்துகொண்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஆட்சிக்கு வந்து ஒருவருடம் கடந்துள்ளது. இனவாத இயக்கங்களின் செயல்கள் பலவீனமடைந்து இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் வளர்ச்சி அடைந்துள்ள காலகட்டம் இதுவாகும். கடந்த காலங்களில் எமது நாட்டில் பல இடங்களில் இனவாத முரண்பாடுகள் தோன்றின. தற்போது அப்படியல்ல. இனவாதம் இல்லாத செல்வந்த நாடு அவசியம். அந்த நாட்டை உருவாக்க வேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத்தில் நாங்கள் வெற்றிபெற்றோம். தமிழ் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது. நான் ஒரு உறுதிமொழியை வழங்குகிறேன். நீங்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை துளியேனும் சிதைவடைய விடாமல், இனவாதம் இல்லாத நாட்டை உருவாக்கியே தீருவேன் என்பதே அந்த வாக்குறுதி. அனைவரும் நிம்மதியாக வாழும் நாட்டை உருவாக்குவோம் - என்றார். (அ-ம-26)

## காணி...

வலிகாமம் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர நேற்று விசேட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். இதனால், இன்றையதினம் சில அறிவிப்புகள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள ஜனாதிபதி அநுர, வலி.வடக்கில் நீண்டகாலமாகப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதற்கு அமையவே, முப்படைத் தளபதிகளுடன் காங்கேசன்துறையில் நேற்று இரவு விசேட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். இதன்போது, சில காணிகளை விடுவிப்பதில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று இரண்டு நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ள நிலையில், அந்த நிகழ்வுகளில் வைத்து சில அறிவிப்புகள் வெளிவரலாம் என்று நம்பப்படுகின்றது. (அ-ம-26)

## சிறையிடப்பட்ட...

திருகோணமலையில் அத்துமீறி புத்தர் சிலை அமைத்த விவகாரத்தில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தேரர் ஒருவர் சாகும்வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

கரையோர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி திருகோணமலை கடற்கரையில் புத்தர்சிலையை வைத்து, மதங்களுக்கு இடையிலும், இனங்களுக்கு இடையிலும் பதற்றத்தை ஏற்படுத்தி நான்கு பிக்குகள் உட்பட ஒன்பது பேர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வனவாசி பலங்கொட கசியப்ப தேரரே இவ்வாறு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

நேற்றுக் காலையில் இருந்து இந்தப் போராட்டத்தை அவர் மேற்கொண்டு வருகின்றார் என்று சிறைச்சாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. நேற்று முழுவதும் அவர் உணவு உட்கொள்ளவில்லை என்றும் சிறைத்துறை தகவல் வெளியிட்டுள்ளது. (அ-ம-50)

## கடலில்...

கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நான்கு இளைஞர்கள் நீராடச்சென்ற வேளையிலேயே அவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். ஏனைய இருவரில் ஒருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றையவர் காணாமற்போயுள்ள நிலையில், அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-இ)

## பிரஜாசக்தி...

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், 'பிராஜா சக்தி' என்றதொரு திட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளாட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை, அதற்குச் சமாந்தரமாக தமது கட்சியை முன்னிலைப்படுத்திச் செயற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். மக்களின் பிரதிநிதித்துவத்தைப் புறந்தள்ளி மேற்கொள்ளப்படும் இந்த நகர்வு மிகவும் தவறானது என்பதுடன், இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கிலும், கிழக்கிலும் ஏராளமான உள்ளாட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தியினர் தோல்வியடைந்துள்ளனர். அதனால்தான், உள்ளாட்சி சபைகளுக்குச் சமாந்தரமான முறையில், தமது கட்சியை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியம் கருதி இவ்வாறு செயற்படுகின்றனர். எனவே, வறுமை ஒழிப்புத்திட்டம் என்ற போர்வையில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நகர்வுகளை நாங்கள் தீர்க்கமாக எதிர்ப்போம்.

சுனாமிப் பேரலையின் பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் கடும் பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், விசேட குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்கள் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

ஆனால், அந்தத் திட்டத்துக்கு எதிராக இதே ஜே.வி.பி.யினர்தான் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்று, அந்தத் திட்டத்தைச் சவாலுக்கு உட்படுத்தினார்கள். அதை சவாலுக்கு உட்படுத்தும் போது அவர்கள் பயன்படுத்திய கருப்பொருள், 'அரச அமைப்புகளுக்கு சமாந்தரமாக வேறொரு அமைப்பை உருவாக்க முடியாது' என்பதே. அதே சட்டக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் நாங்களும் பிராஜாசக்தி திட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ம-100)

## நீண்டகாலம்...

கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் துணை அம்சமாகவே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நபர்களின் தண்டனையைத் தளர்த்துவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனையைக் குறைக்கவே முதற்கட்டமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷண தெரிவித்துள்ளார். இது தொடர்பான பரிசீலனைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்குவதற்காக விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், நாடு முழுவதும் கைது செய்யப்பட்ட நபர்களைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நீதியமைச்சர் ஹர்ஷண மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## நாவற்குழியில்...

கிளிநொச்சியில் இருந்து ஆற்றுமணல் ஏற்றிவந்த டிப்பர், சாரதியின் தூக்கக் கலக்கம் காரணமாக நாவற்குழிப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து, மதில்களுடன் மோதுண்டு இந்த விபத்து சம்பவித்துள்ளது.

அச்சுவேலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த நாகராசா ஜீவராஜா (வயது-23), கிளிநொச்சி பத்து வீட்டுத்திட்டம் பகுதியைச் சேர்ந்த ரஜீவன் விதுசன் (வயது-20) ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-28-113)

## போர்க்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் மேற்பார்வையில், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் விசேட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படும் வரை, இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் தொடர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் ஆயுதமோதலின்போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும்.

அதுமாத்திரமன்றி இத்தகைய மனித உரிமை மீறல்கள், தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்கும் வலுவான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதி விரைவாக நீதி வழங்க வேண்டியது அவசியம். அத்துடன், போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், பொறுப்புக்கூறச் செய்வதற்கும் ஶ்ரீலங்கா அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கைக்கு எதிரான குற்றவியல் விசாரணைகள், வழக்குத்தாக்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இலங்கையில் சர்வதேச சட்டங்களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் 2021ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் நிறுவப்பட்டது. இருப்பினும் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 26 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின் போது நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் கடந்தகால அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன.

'நீதியை நிலைநாட்டுவோம்' என்ற வாக்குறுதியுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கடந்த 2024ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியிருந்தாலும், தற்போதுவரை எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை - என்றுள்ளது. (அ-ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்தோட்டப் பராமரிப்பாளர், காவலாளி தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு

**1.பூந்தோட்டப் பராமரிப்பாளர்**

**2.காவலாளி** ஆகியோர் தேவை.

**தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.**

அனுபவம் விரும்பத்தக்கது / அனுபவத்துக்கு ஏற்ப முன்னுரிமை வழங்கப்படும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**




தொடர்பு :- 077 115 4843



ரூ.13 கோடி சுப்பர் பரிசு வெற்றியாளர் உட்பட
2025 இல் வெற்றியாளர்கள்

**சுப்பர் பரிசு வெற்றியாளர்கள் 03**

**இருபது இலட்ச வெற்றியாளர்கள் 53**

**இலட்சாதிபதிகள் 1,297**

அந்த வெற்றியாளர்களிடையில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை

**ரூ. 61 கோடி**

2025 நிதிப்பங்களிப்பு
அரச ஒன்று திரட்டிய நிதியத்துக்கு
**ரூ. 38 கோடி**

தேசிய லொத்தர்



தன நிதானய




தைத்திருநாளை முன்னிட்டு சண்டிலிப்பாய் கல்வளை பாரதி சனசமூக நிலையத்தில் பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றன. (ச-40)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- AV வீதி முகப்புடன்.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம் ரூபாய்.

**தொடர்பு:- 076 860 2770**
**076 987 8617**

(CS 31005) A



**மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.
யாழ். மாவட்டத்திற்கு
65,000 இருந்து...
மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு:- 076 324 9977

(CS 31017) A


# பிரமாண்ட பட்டங்களின் பங்கேற்புடன் வல்வையில் பட்டவிழா கோலாகலம்!

## ஆயிரக் கணக்கில் மக்கள் குவிந்தனர்


யாழ், ஜன. 15


உதயனின் ஊடக அனுசரணையில், வல்வை உதயசூரியன் கழகமும், வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த 'வினோத பட்டப்போட்டித் திருவிழா' நேற்றுக் கோலாகலமாக இடம்பெற்றது.


வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிமுதல் இரவுவரை இந்தப் பட்டத் திருவிழா நடைபெற்றது. 'ஓர் உயிரினம் பிறிதொரு உயிரைப் பிரசவிப்பதுபோன்று' உருவாக்கப்பட்ட பட்டம் முதலிடத்தைப் பிடித்தது. அத்துடன் பல்வேறு வகையான நூற்றுக் கணக்கான பட்டங்கள் போட்டியில் இடம்பெற்றன. (ம)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.